# நடப்பு நிகழ்வுகள்- ஜூன் 18 - 2017

- தமிழ்நாடு மனித மேம்பாட்டுத்துறை அறிக்கை (Tamil Nadu Human Development Report 2017) வெளியிட்டுள்ளது. இதில் கன்னியாகுமரி, விருதுநகர் மற்றும் தூத்துக்குடி மாவட்டங்கள் முதல் மூன்று இடங்களை பெற்றுள்ளன. அரியலூர், பெரம்பலூர் மற்றும் தேனி மாவட்டங்கள் கடைசி மூன்று இடங்களை பெற்றுள்ளன. விழுப்புரம் மற்றும் பெரம்பலூர் மாவட்டங்கள் கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக எவ்வித மனித மேம்பாட்டு வளர்ச்சியையும் பெறவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

- உத்திரப்பிரதேச மாநிலத்தின் கோரக்பூர் நகரில் பிராந்திய பட்டு ஆராய்ச்சி மற்றும் தயாரிப்பு மையம் (regional Silk Research and Production centre) அமைக்கப்படவுள்ளது.

- “பிரிட்டிஷ் அரசாங்கத்தின் மெம்பர் ஆப் ஆர்டர்” (Menber of the Order of the British Empire) விருது சச்சின் டெண்டுல்கரின் உறவினரான மும்பையில் ஏழை மக்களுக்காக “அப்னாலயா (Apnalaya) எனும் தொண்டு நிறுவனம் நடத்தி வரும் திருமதி.அன்னாபெல் மேத்தா (Annabel Mehta) விற்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

- “ஆர்பெல் பரிசு 2017” (Orwell Prize), “Citizen Clem” என்ற கிளெமெண்ட் அட்லியின் வாழ்க்கை வரலாற்று புத்தகத்திற்கான “ஜான் பீவ்” (John Bew) என்பவருக்கு வழங்கப்பட்டுள்ளது.

- சர்வதேச யோகா தினத்தையொட்டி “Clebrating Yoga” எனும் மொபைல் ஆப்பை மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்துறை அமைச்சர் ஹர்ஸ்வர்த்தன் வெளியிட்டுள்ளார்.

- ஐ.சி.சி சாம்பியன் டிராபி 2017 போட்டியில் “பிளேயர் ஆப் தெ சீரியஸ்” (Player of the Series) பட்டம் பாகிஸ்தான் கிரிக்கெட் வீரர் ஹாசன் அலிக்கு வழங்கப்பட்டுள்ளது.

OXFORD IAS ACADEMY

- சுற்று சூழல் மீதான தனி மனிதர்களின் பாதிப்பு (Human impact on environment per person) தொடர்பான சர்வதேச தர வரிசையில் 102 நாடுகள் அடங்கிய பட்டியலில் இந்தியா 75 வது இடத்தை பெற்றுள்ளது. இப்பட்டியலில் முதல் 5 இடங்களை மொசாம்பிக், எத்தியோப்பியா, ஷாம்பியா, லாட்வியா மற்றும் கென்யா ஆகியவை பெற்றுள்ளன.

- தேசிய கலாச்சார வரைபடத் திட்டம் (National Mission on Cultural Mapping of India) உத்திரப்பிரதேசத்தின் மதுரா மாவட்டத்திலுள்ள கோவர்தன் எனுமிடத்தில் மத்திய சுற்றுலா மற்றும் கலாச்சாரத்துறை அமைச்சர் மகேஷ் சர்மா அவர்களால் துவக்கி வைக்கப்பட்டுள்ளது.
- இத்திட்டம் மத்திய அரசின் “EK Bharat Shreshtha Bharat” எனப்படும் மாநிலங்களுக்கிடையேயான கலாச்சார இணைப்பை ஏற்படுத்துவதற்கான திட்டத்தின் ஒரு அம்சமாகும். இத்திட்டம் சர்தார் வல்லபாய் பட்டேல் அவர்களின் பிறந்த தினமான அக்டோபர் 31 ல் பிரதமர் மோடி அவர்களால் 2015 ஆம் ஆண்டு துவக்கி வைக்கப்பட்டது.

- SBI வங்கி பால் பண்ணை விவசாயிகளுக்கு கடன் வழங்குவதற்காக திருமலா பால் உற்பத்தி நிறுவனத்துடன் இணைந்துள்ளது. இத்திட்டத்தின் படி கொட்டகை அமைக்க, பால் மாடுகள் வாங்க, பால் கறவை இயந்திரங்கள் வாங்க, வைக்கோல் வெட்டும் இயந்திரம் வாங்குதல் மட்டும் குளிர்விக்கும் அறை அமைத்தல் போன்ற நவீன வசதிகள் செய்யவும் கடன் வழங்கப்படும். தென்னிந்தியாவைச்சேர்ந்த திருமலா பால் உற்பத்தி நிறுவனத்தை 2014-ல் பிரான்சின் Groupe Lactalis வாங்கியது.

- பிஎஸ்எல்வி சி 38 ரக ராக்கெட் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த 29 நானோ செயற்கைக்கோள்களையும் இந்தியாவின் சார்பில் கார்டோசாட் 2 செயற்கைக்கோளை சுமந்து 31 செயற்கைக்கோளுடன் ஜுன் 23 ல் விண்ணில் பாய்கிறது. விண்ணில் செலுத்தி வெற்றி பெற்ற வரிசையில் பிஎஸ்எல்வி சி 38 வரிசை ராக்கெட் இஸ்ரோவின் 40-ஆவது ராக்கெட்டாகும்.

OXFORD IAS ACADEMY